இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் களம் இறங்கும் துடிப்போடு இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த முயற்சி பலனளிக்காது என்று தெரிந்ததும் சஜித் பக்கம் பாய்வதா, கோட்டா பக்கம் நிற்பதா என்று தெரியாமல் கொஞ்சக் காலம் இழுபறிப்பட்டார். பக்கம் 02

பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 23 வெள்ளிக்கிழமை 11.10.2019 கதிர் 340





# குடும்ப - ராணுவ - அடிமை ஆட்சிக்கு ஒருபோதுமே இடமளிக்கமாட்டேன்!

## ஜன சமுத்திரத்தின் முன் சஜித் நேற்று வாக்குறுதி

கொழும்பு, ஒக். 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் பாதுகாப்பா அல்லது ஒரு குடும்பத்தின் பாதுகாப்பா என்பதை யோசியுங்கள். குடும்ப - இராணுவ - அடிமை ஆட்சி அவசியம் இல்லை. இதற்கு ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன். எனவே, இந்தத் தேர்தலில் பொதுமக்களின் சக்தியே வென்றெடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பக்கம் 03

## பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொறுப்பு பொன்சேகாவுக்கே!

### அவர் முன்னிலையில் சஜித் உறுதி



கொழும்பு, ஒக். 11

நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் – உறுதிப்படுத்தும் – பொறுப்பு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன் பக்கம் 02

## இலங்கைக்கு 793 கோடி ரூபா நிதி வழங்குகிறது ஐரோப்பிய ஒன்றியம்



கொழும்பு, ஒக். 11

இலங்கையில் நிலைமாற்றம், ஒருமைப்பாடு மற்றும் மக்களாட்சி தொடர்பான திட்டத்தை முன்னெடுப்பதற்கு 793 கோடி ரூபா பக்கம் 03

## கொலைகாரத் தலைவன் வேண்டுமெனில் கோட்டாபயவுக்கு வாக்களிக்களியுங்கள்!

### காலிமுகத்திடலில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 11

நாட்டு மக்களுக்குத் தேவை மக்களைக் காக்கும் தலைவனா? அல்லது மக்களைக் கொலை செய்யும் தலைவனா? என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. மக்களைக் பக்கம் 03

## என் சொந்தக் காசிலேயே சிவாஜிக்கு கட்டுப்பணம்!

### அனந்தி நேற்றுத் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 11

ஜனாதிபதித்தேர்தலில் களம் இறங்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு பக்கம் 03

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ்க் கட்சிகள் பொது உடன்பாடொன்றுக்கு வரும் ஏதுநிலை!

### சந்திப்பில் பங்கேற்ற கட்சிப் பிரமுகர்கள் கருத்து



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக் 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை ஒரேகுரலில் வெளிப்படுத்தும் நோக்கில் யாழ். பல்கலைக் பக்கம் 02

## நீராவியடி சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாநகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 11

நீராவியடி சம்பவத்தைக் கண்டித்தும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வலியுறுத்தியும் யாழ். மாநகர பக்கம் 02

## சிங்கப்பூருக்கு பறந்தார் கோட்டாபய ராஜபக்ஷ!

கொழும்பு, ஒக். 11

மருத்துவ சிகிச்சைக்காகப் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். பக்கம் 03

## பொதுஜன பெரமுன - சு.க. உடன்படிக்கை கைச்சாத்து



கொழும்பு, ஒக். 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கூட் பக்கம் 02

## சு.க. – பெரமுன ஒன்றிணைவே நாட்டு மக்களின் விருப்பமாம்!

### கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 11

சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டுமென மக்கள் விரும்பியதன் காரணமாகவே, இந்தத் பக்கம் 03

# நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்!!

## சஜித் முன் பொன்சேகா சபதம்

கொழும்பு, ஒக். 11

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த எனக்குத் தந்த பொறுப்பை நான் மதிக்கின்றேன். அந்த எதிர்பார்ப்பை நான் நிறைவேற்றுவேன். உங்களின் – நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நான் செயற்படுவேன். இராணுவத் தளபதியாக நான் செயற்பட்டபோது போரை இன்னுமொரு தளபதிக்கு வைத்து விட்டு செல்லமாட்டேன் என்று கூறினேன். அப்படியே நான் செய்தேன். அதுபோலவே நான் இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன். சட்டத்தைக் கையில் எடுக்காமல் நாங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இதில் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போது, நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் – உறுதிப்படுத்தும் – பொறுப்பு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார். அதன்பின்னர் சரத் பொன்சேகா உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

படைத்தரப்பினருக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நாம் தீர்க்க வேண்டும். ஓய்வு பெற்ற படையினர், பொலிஸாரின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும்.

படையினர் குறித்து இன்று அக்கறையாகப் பேசும் ராஜபக்ஷவினர் அன்று படையினருக்கு என்ன செய்தனர்? அவர்களால் படையினர் பாதிக்கப்பட்டனர். இங்கே பக்கத்தில் இருக்கும் இராணுவத் தலைமையகம் தரைமட்டமாக்கப்பட்டது. அந்தக் காணி சீனர்களுக்கு வழங்கப்பட்டது. அன்று தனிப்பட்ட காரணத்தினால் அமெரிக்கா சென்ற கோட்டாபய இன்று இராணுவ நலன் பற்றி பேசுகின்றார்.

சுனாமி நிவாரண நிதியைத் திருடிய ராஜபக்ஷ கூட்டம் எப்படி மக்களுக்கு நிவாரணம் வழங்கப் போகின்றது? மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துவோம் – என்றார். (ஐ)

## மலேசியாவில் புலி ஆதரவாளர்கள் 7 பேர் கைது

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மலேசியாவில் மாநிலம் ஒன்றின் இரு சட்ட மன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேரை நேற்று மலேசியப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

மேற்படி இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்களும் கடந்த வருடம் மாவீரர் தினத்தை ஒட்டித் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தமையுடன் மாவீரர்களைப் போற்றி உரையாற்றியுமிருந்தனர் எனவும் கூறப்பட்டது. (உ)

## நீராவியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முல்லை நீராவியடியில் நீதிமன்ற உத்தரவையும் மீறிப் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமைக்குப் பலரும் எதிர்ப்பைத் தெரிவித்துப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

அத்தோடு சம்வத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் நீதியைக் கோரியும் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் உள்ளூராட்சி மன்றங்களில் கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன் தொடராகவே யாழ். மாநகர சபையிலும் சம்பவத்தைக்கண்டித்தும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியும் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ-07)

## ஆணை வழங்குங்கள் அதிகம் செய்வோம்!

### இப்படிக் கோருகின்றார் ரணில்

நாடாளுமன்றத்தில் சிறுபான்மையாக இருந்து கொண்டு முன்னெடுத்த சீர்திருத்தங்களை மேலும் பல மடங்காக முன்னெடுப்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதைத் தொடர்ந்து வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆணை வழங்குங்கள் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த ஐந்து வருடங்களில் நடத்திய வெளிப்படையான ஆட்சியின் மூலம் செயற்படுத்தப்பட்ட சீர்திருத்த செயன்முறையை முன்கொண்டு செல்ல, ஜனாதிபதி தேர்தலிலும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆதரவு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவ்வாறு வழங்கினால் அரசியல் யாப்பு உருவாக்கம் உள்ளிட்டவற்றில் சீர்த்திருத்தம் மேற்கொண்டு இலங்கையை ஆசியாவில் உயரிய இடத்திற்கு கொண்டு செல்வதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

சிவில் சமூகம் மற்றும் தொழிற்சங்கங்கள் பல ஒன்றிணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் கூறினார்.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக மாணவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சியின் பயனாக நேற்றைய சந்திப்பில் பங்குபற்றிய 6 கட்சிகளும் பொது இணக்கப்பாடொன்றுக்கு வரும் ஏதுநிலைகள் தோன்றியிருப்பதாக இதில் பங்கேற்ற கட்சிப்பிரமுகர்கள் கருத்து வெளியிட்டனர்.

பொது இணக்கப்பாட்டு உடன்படிக்கைக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமும், அவர்களின் பின்புலத்தில் இயங்கும் வல்லரசுகளிடமும் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது இணக்கப்பாட்டில் ஒப்பமிடும் வகையில் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மீண்டும் கூடுவர் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளை ஓரணியில் திரட்டி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான நிலைப்பாடொன்றுக்குக் கொண்டுவரும் எத்தனத்தில் இறங்கியிருக்கும் யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் முயற்சியில் 3 ஆவது சந்திப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பொது அறையில் நேற்று மாலை 5 மணி முதல் இடம்பெற்றது.

நேற்றைய சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் வலி வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க. அருந்தவபாலன், புளொட் சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ இயக்கத்தின் சார்பில் அதன் செயலாளர் நாயகமும், மூத்த சட்டத்தரணியுமான என். சிறீகாந்தா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொணடனர்.

சந்திப்பை முடித்து வெளியேறிய அனைவரும் ஊடகங்களிடம் பேசியபோது –

நேற்றைய சந்திப்பில் பங்குபற்றிய 6 கட்சிகளும் பொது இணக்கப்பாடொன்றுக்கு வரும் ஏதுநிலைகள் தோன்றியிருப்பதாகவும், இது பற்றி மாணவர்கள் தொகுத்துள்ள ஆவணத்தில் ஒப்பமிடுவதற்கு அனைத்துக் கட்சிகளும் கொள்கையளவில் இணங்கியுள்ளன என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இருந்தபோதிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டை ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், தமிழர் தரப்புக் கோரிக்கைகளுக்கு பிரதான வேட்பாளர்கள் இணங்கி வருவார்கள் என்ற நிலை தோன்றினாலொழிய தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யப்போவதில்லை எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பில் சந்திப்பில் கலந்து கொண்ட சட்டத்தரணி சுகாஷ் கனகரட்ணம் தெரிவித்தார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது – வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும் – இந்தப் பக்கமும் இல்லை, அந்தப் பக்கமும் இல்லை, தாம் நடுநிலை என்று அறிவித்தல் விடுத்து தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து தள்ளி நிற்கின்றார்.

அவரது சுதந்திரக் கட்சிதான் மெல்ல மெல்லக் கரைந்து பொதுஜன பெரமுனவாகத் திரண்டது. அதுவும் சு.க. மூலம் கிட்டிய எம்.பி. பதவிகளை வைத்துக் கொண்டுதான் நாடாளுமன்றத்தில் ஆளும் ஐ.தே.கட்சிக்கு அடுத்துப் பெரிய தரப்பாக பொதுஜன பெரமுன உயர்ந்தது. அது விடயத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குக் கூட லாயக்கற்றுப் போனார் சு.கவின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால.

இப்போது அவரது கட்சியில் எஞ்சியிருந்த ஒன்றரை டசின் எம்.பிக்களுக்கும் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு என்று ஒரேயடியாக சு.க. என்ற கப்பலைக் கவிழ்க்க, அதன் தலைவர் மைத்திரிபால மட்டும் அந்தப் பக்கமும் போகாமல், இந்தப் பக்கமும் போகாமல் திடீரென நடுநிலை 'லைன்' ஏன் பிடிக்கின்றார் என்பது எனக்கு விளங்கவில்லை. இதற்குள் பொதிந்து கிடக்கும் சூத்திரம் யாது என அறிய கொஞ்சம் நோண்டிப் பார்த்தேன். கொழும்பு வட்டாரங்களில் இருந்து சில நம்பகமான தகவல் கசிந்தன. அவை இவைதான்:–

எஞ்சியிருந்த சு.கவின் எம்.பிக்களோடு தாமும் கோட்டா பக்கம் செல்லவே மைத்திரியார் ஆசைப்பட்டாராம். ஆனால், பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷதான் அவரை மட்டும் வரவேண்டாம் என்று கடைசி நேரத்தில் தடுத்து கதவுக்குத் தாள்ப்பாழ் போட்டார்.

*“இந்தத் தேர்தல் பிரசாரத்தில் கடந்த ஐந்து வருட ஆட்சியை போட்டுப்பிடித்துத்தாக்குவதுதான் எங்கள் பிரதான உத்தி. அந்த ஐந்து வருட ஆட்சியில் இந்த அரசின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரியாரும் பிரதான பங்காளிதான். அவரை அழைத்து எங்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டு எப்படி இந்த அரசை நாம் போட்டுத் தாக்க முடியும்? ஆகவே அவரை (ஜனாதிபதி மைத்திரியாரை) இந்தக் கூட்டுக்குள் வராமல் தள்ளி நிற்கச் சொல்லுங்கள்!”* – என்றாராம் மஹிந்த ராஜபக்ஷ.

இன்னும் ஐந்து வாரங்களே ஜனாதிபதியாக இருக்கப் போகும் மைத்திரியாரைத் தம்பக்கம் சேர்ப்பது உதவியாக இருக்காது, உபத்திரவமாக இருக்கும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து, புரிந்து கொண்டிருப்பார் போலும் மஹிந்தர்.

நேற்றுமுன்தினம் அனுராதபுரத்தில் நடந்த பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில், தற்போதைய அரசின் கீழ் படையினர் சிறை வைக்கப்பட்டிருக்கின்றமையை ஒரு பிழையான விடயமாக முன்னிறுத்திப் போட்டுப் பிடித்தார் கோட்டாபய.

அந்தக் கருத்து தற்போதைய அரசியல் சூழலில் தேசிய ரீதியில் பேசுபொருளாக மாறியிருக்கின்றது. அந்த விடயம் தெற்கில் மட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

உண்மையில் பார்த்தால், படையினரைக் கைது செய்து தடுத்து வைத்திருக்கும் விடயங்களில் கணிசமான பகுதி பாதுகாப்புத் துறையோடு சம்பந்தப்பட்டது. நேரடியாக ஜனாதிபதியுடன் தொடர்புபட்டது. இவ்விடயத்தில் பிரதான பொறுப்பு பிரதமர் ரணில் தலைமையிலான அரசுக்கு என்பதை விட ஜனாதிபதிக்கே அதிகம்.

இந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் தமது கூட்டமைப்பில் உள்வாங்கி, அவரையும் தங்கள் பக்கத்தில் வைத்திருந்தால் படையினர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடயத்தைக் கூட பொதுஜன பெரமுனவால் வாய் திறந்து மேடையில் பேச முடியாது போயிருக்கும்.

இதையெல்லாம் நேரத்துடனேயே புரிந்து கொண்டுதான் – ஊகித்துக் கொண்டுதான் – மைத்திரிபாலவைப் புறமொதுக்கி சு.கவை மட்டும் தனது பொதுஜன பெரமுனவோடு அரவணைத்துக் கொண்டார் மஹிந்தர்.

*'சோழியன் குடும்பி சும்மா ஆடாது'* பாருங்கோ....!

**- மின்னல் -**

## பொதுஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டணி அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு நேற்று முற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

ஸ்ரீலங்கா பவுண்டேசன் இன்ஸ்ரிரியூட்டில் நேற்று முற்பகல் நடந்த நிகழ்வில், சுதந்திரக் கட்சியின் சார்பில், அதன் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும், பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் செயலாளர் சாகர காரியவசமும், இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இதற்கமைய, அடுத்த நாடாளுமன்றத் தேர்தல், மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும், இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி என்ற பெயரில் , நாற்காலிச் சின்னத்தில் போட்டியிட இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. (ஐ)

## பாதுகாப்பைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகாவுக்கு வழங்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தனக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய பாதுகாப்பு குறித்து சொல்ல வேண்டும். அதனை உறுதிப்படுத்தப் போரை வெற்றி கொண்டவர்களுக்கே அந்தப் பொறுப்பை நாங்கள் வழங்க வேண்டும்.

தன்னைத் தியாகம் செய்து நேரடியாகப் போரை வென்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும்.

அவர் கார்ட்போர்ட் வீரர் அல்லர். அவர் நாட்டுக்கு ஆற்றிய பணியைப் பெருமைப்படுத்தி நாங்கள் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் – உறுதிப்படுத்தும் – பொறுப்பை அவரிடம் வழங்குவோம்.

எமது ஆட்சியில் எந்த அரசியல்வாதிகளுக்கும் ஜம்பர் அணிவிக்க மாட்டோம். அதை நீதிமன்றம் செய்யும். ஆனால், பயங்கரவாதத்தை நாங்கள் இல்லாமல் ஆக்குவோம்.

போதைப்பொருள் ஒழிப்பை நாங்கள் மேற்கொள்வோம். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு உரிய தண்டனை வழங்குவோம் – என்றார். (ஐ)

## குடும்ப - ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித்பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. மக்கள் அலையெனத் திரண்ட இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகத்துடன் போட்டியிட்டு முதல் தர நாடாக இலங்கையை நாங்கள் கட்டியெழுப்ப வேண்டும். நவீன யுகத்துக்கேற்றபடி எங்கள் நாட்டை மாற்றி - நிம்மதிப் பெருமூச்சு விடும் நாடாக மாற்றி அனைத்துத் துறைகளையும் மேம்படுத்த வேண்டும்.

நான் தவறு செய்தால் அவற்றைச் சரிசெய்ய என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். அத்தோடு பொதுமக்கள் முன் வந்து அவர்களிடம் மன்னிப்புக் கோரவும் நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்.

தனது சொந்தக் குடும்பத்துக்கும் தங்கள் உறவினர்களுக்கும் முதலிடம் கொடுக்கும் ஒரு தலைவர் இந்த நாட்டுக்குத் தேவையில்லை.

இந்த நாட்டின் எதிர்காலத்தை ஒரு மாளிகையின் உள்ளே இருக்கும் ஒரு குடும்பம் தீர்மானிக்கக்கூடாது. இந்த நாட்டின் எதிர்காலத்தை இந்த நாட்டின் கடின உழைப்பாளிகளே தீர்மானிக்க வேண்டும்.

நாம் அமைக்கும் புதிய ஆட்சியில் திருட்டு, ஊழல், மோசடிகளுக்கு இடமளிக்கமாட்டோம்.

இந்த நாடு இதுவரை கண்டிராத தூய்மையான அரசாக நமது அரசு மாறும். இதற்கு எதிராக வேலை செய்ய விரும்பும் ஒருவர் இருந்தால், அவர்கள் மூடை கட்டிக்கொண்டு இப்போதே வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

எமது அரசின் கீழ் நாங்கள் சில தியாகங்களை - அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும். அப்படிச்செய்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும். நாட்டின் இறையாண்மை பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

நாங்கள் நாட்டின் உரிமையாளர்கள் அல்லர். நாங்கள் நாட்டின் தற்காலிக பாதுகாவலர்கள். இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை நாங்கள் சிறந்ததாக மாற்றியமைப்போம்.

பெண்களின் எதிர்காலத்தை நல்லபடியாக மாற்றி அவர்களைப் பாதுகாக்க நாங்கள் கொள்கை வகுப்போம். விவசாயக்கொள்கை, தொழிலாளர் கொள்கை வகுப்போம்.

சமுர்த்தி நிவாரணம் விசேட முறையில் வழங்கப்படும். அதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பித்து ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்குவோம். அச்சமற்ற சூழ்நிலையை நாங்கள் ஏற்படுத்துவோம் - என்றார். (ஐ)

## சிங்கப்பூருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை சிங்கப்பூர் விமானச் சேவைக்கு சொந்தமான எஸ்.கியூ. 468 விமானத்தில் அவர் சிங்கப்பூருக்குப் பயணமானார்.

நேற்று முன்தினம் தொடக்கம் 12ஆம் திகதி வரை சிங்கப்பூர் செல்ல கோட்டாபயவுக்கு விசேட மேல் நீதிமன்றம் கடந்த 3 ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது.

கோட்டாபய மருத்துவ சிகிச்சைகளை முடித்துக்கொண்டு, மீண்டும் 12 ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## என் சொந்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது சொந்தக் காசிலேயே கட்டுப்பணம் செலுத்தினேன். மாறாக நான் எந்தவொரு ராஜபக்ஷ ஆட்களையும் சந்திக்கவில்லை. நான் ராஜபக்ஷ தரப்புக்களைச் சந்தித்தேன், அவர்களின் பின்னணியில் தான் இயங்குகிறேன் எனக் குற்றம் சுமத்துபவர்கள் ஆதாரத்துடன் நிரூபியுங்கள்.

- இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன்.

நல்லூரில் அமைந்துள்ள யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 1987 இல் இந்தியப் படை இங்கு வந்தபோது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். தனது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே போரை உருவாக்கினார்.

இந்தியப்படை வெளியேறட்டும் என்று சொல்லிப் பதவிக்கு வந்த ரணசிங்க பிரேமதாஸவும் 'ஈழம் தவிர எல்லாம் தருவேன்' என்று சொல்லி ஆறாம் சட்டத் திருத்தத்தை மாற்றலாம் என்றும் சொல்லி பின்னர் அதை மாற்றாது தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலித்தார். போரை நோக்கி நகர்ந்தார்.

பின்னர் சமாதானப் புறாவாகத் தன்னைக் காட்டிக்கொண்டு ஜனாதிபதிப் பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கொடிய போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டார். அவரைத் தொடர்ந்து வந்த மஹிந்த இன அழிப்புப் போரின் உச்சிக்கே சென்றார். பின்னர் வந்த மைத்திரிபால சிறிசேன 'நல்லாட்சி' என்ற பெயரில் தமிழர் தாயகத்தின் மீது ஒரு மரபுரிமை இன அழிப்புப் போரையே தொடுத்திருக்கிறார்.

அனுராதபுரத்தையும் பொலநறுவையையும் மையமாகக் கொண்டது அவரது சிந்தனை. இது வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக உடைக்கும் திட்டம். நல்லிணக்கம் என்ற பெயரில் நடத்தப்படும் ஒரு புதுவிதமான போர். இதற்குக் கிழக்கில் கன்னியாவும் வடக்கில் நீராவியடியும் சாட்சி. இந்தப் போர்கள் எல்லாம் ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்பின் ஒவ்வொரு பரிமாணங்களாக அடுத்தடுத்த கட்டப் படிமுறைகளாக விரிகின்றன. தொடரும் இந்தப் போர்களின் அடுத்த வடிவத்தை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்ற போட்டியே தற்போது தென்னிலங்கையில் நடக்கவிருக்கிறது.

இந்தத் தருணத்தில் ஈழத்தமிழர்களான நாங்கள் மேற்கொள்ள வேண்டிய தெரிவு என்ன? சொல்ல வேண்டிய செய்திதான் என்ன? கோட்டாபய, சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் அநுரகுமார திசநாயக்க போன்றவர்கள் சிங்களப் பேரினவாதத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. இவர்களுடன் தமிழ்த் தரப்பு பேரம் பேசவேண்டும் என்று சிலர் வாதிடுகிறார்கள். பேரம் பேசும்போது அவர்கள் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு எந்த வித சர்வதேச உத்தரவாதமும் இல்லாமல் பேரம் பேசுவதில் ஒரு பலனும் இல்லை. சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுதல் என்பது தற்போதைய நிலையில் செல்லாக்காசு போன்றது.

எழுதிய ஒப்பந்தங்களையே கிழித்துப்போடும் சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுவதில் பலன் ஏதும் இல்லை. மாறாக இவர்களை இயக்கும் சர்வதேச சக்திகளுடன் தான் நாங்கள் பேரம் பேசவேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் இன்று இறுக்கமாகப் பின்னிப்பிணைந்த ஓர் அணியாகச் செயற்படுகின்றன. இந்து - பசிபிக் கடற்போர் முனையில் சீனாவுக்கெதிரான வியூகம் வகுப்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் ஜப்பானுடனும் அவுஸ்திரேலியாவுடனும் நான்முனைச் சக்திகளாக இணைந்திருக்கின்றன. இந்து சமுத்திரம் போர்ச்சூட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது.

2009 இல் இருந்த பூகோளப் போட்டா போட்டியை விட தற்போதைய இந்து சமுத்திரக் கேந்திர முக்கியத்துவம் பல மடங்கு வீச்சாகியிருக்கிறது. அமெரிக்காவும் இந்தியாவும் நினைத்திருந்தால் கோட்டாபயவைத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழலை இலகுவாகத் தோற்றுவித்திருக்கலாம். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை.

இராணுவத்தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட போது அதைக் கண்டித்த சர்வதேசத் தரப்புகள் ஐ.நாவில் சமாதானப் படைக்கான இலங்கையின் பங்களிப்பைக் குறைக்கவுள்ளன என இலங்கை அரசுக்கு ஒரு செய்தியைச் சொல்லி மிரட்டிய சர்வதேசச் சமூகம் சவேந்திர சில்வாவுக்கே நடைமுறையில் கட்டளைத் தளபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் களமாட அனுமதித்தது மட்டும் ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அமெரிக்காவில் கோட்டாபயவுக்கு எதிராக வழக்குகள் மனித உரிமை நிறுவனங்களால் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைக் காரணம் காட்டி அமெரிக்க அரசு அவரது அமெரிக்கப் பிரஜாவுரிமையை இரத்துச் செய்ய முடியாது என்று மறுத்திருக்கலாம். அதை வெளிப்படையாகவே ஓர் அறிக்கையிட்டுச் சொல்லியிருக்கலாம். ஏன் செய்யவில்லை?

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் கொழும்புக்கு வந்து உரையாற்றிய அமெரிக்காவின் முன்னாள் இலங்கைத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் கோட்டாபயவைப் மெச்சிப் பேசியமையையும் நாங்கள் கவனித்திருக்கிறோம்.

மறுபுறத்தில் சஜித் பிரேமதாஸ போட்டியாளராக முன்னிலைப் படுத்தப்படுகிறார். அவரும் அம்பாந்தோட்டையின் பிரதிநிதி. ஜனாதிபதி ஆட்சியின் நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்தவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் விரும்புவது போலத் தெரிந்தாலும் அப்படியெல்லாம் செய்வதாகத் தான் ஒத்துக் கொள்ளவில்லை என்ற தோரணையிலேயே சஜித் பிரேமதாஸ இயங்குகிறார்.

ஒற்றையாட்சியைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார். 'ஒற்றையாட்சியை மாற்றாமல் அதிகளவு அதிகாரப் பரவலாக்கம்' என்று அவர் சொல்லியிருப்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு வெற்றுக் கோசமே.

அவரின் தகப்பன் சொன்ன 'எல்லாம் தருவேன்' 'ஈழம் தவிர' என்பதை வரலாற்றில் பார்த்து வந்தவர்கள் தான் நாம் என்பதை மறந்து விடக் கூடாது. தென்னிலங்கையைப் பொறுத்தவரை இனவாத அரசியலை யார் அதிகம் பேசுகிறார்களோ அவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற மனநிலை சிங்கள மக்கள் மத்தியில் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது - என்றார். (ஐ-07)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(4 கோடி யூரோ) நிதியுதவியை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தூதுவர் துங்-லாய் மார்க்கின் பிரதிநிதிக்கும் நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்கவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்திட்டமானது, வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் செயல்படுத்தப்படும் எனவும் நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மாகாணங்களில் அபிவிருத்தி, உள்ளூர் சேவை மற்றும் பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு விடயங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என நிதி அமைச்சு அறிக்கை கூறுகிறது.

உலகவங்கியின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்திட்டமானது, உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## கொலைகாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக்கும் தலைவன் வேண்டுமானால் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்து அவரை நாட்டின் ஜனாதிபதி ஆக்குங்கள். அவ்வாறு இல்லாமல் நாட்டு மக்களைக் கொலை செய்யும் தலைவன் வேண்டும் என்றால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்களியுங்கள்.

- இவ்வாறு பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

சஜித் பிரேமதாஸவை நாங்கள் ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்த பின்னர் எமது எதிரணியினர் காலஞ்சென்ற எமது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

அன்று அவருடன் ஒன்றாக வேலை செய்த அமைச்சர் என்ற வகையில் நான் இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும். ரணசிங்க பிரேமதாஸவினால்தான் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தில் வெற்றி பெற்றார்.

ரணசிங்க பிரேமதாஸவே குடும்பவாதம், ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழித்து நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தார். நான் ரணசிங்க பிரேமதாஸவின் அரசில் கைத்தொழில் அமைச்சராகப் பணியாற்றினேன்.

அவர் தெளிவான நோக்கத்துடனேயே நாடு முழுவதும் 200 ஆடைத் தொழிற்சாலைகளை திறக்கக் காரணமாக இருந்தார். அவர் செய்த வேலைகளையே சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.

அம்பாந்தோட்டையில் பத்தாயிரம் ஏக்கரில் தொழிற்பேட்டை தேவையில்லை என்று மஹிந்த மற்றும் கோட்டாபய ஆகியோரிடம் கேட்கின்றேன்.

காலிமுகத்திடல் மைதானத்தை மேலும் 40 மீற்றர்கள் கடல் பக்கம் விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். இதேபோன்று பாரிய மாற்றங்களை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்.

சஜித் பிரேமதாஸ அரசியலுக்கு வந்தபோது, ஏன் மத்திய கொழும்பைத் தெரிவு செய்யவில்லை என்று கேட்டேன். அப்போது தனக்கு அம்பாந்தோட்டை தருமாறு கேட்டார். வறிய மக்களோடு இருக்க வேண்டும் என அவர் என்னிடம் கூறினார்.

அன்றில் இருந்து வறிய மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, குடும்பவாதத்தில் இருந்து மக்களை மீட்டெடுத்து, மக்கள் மத்தியில் இருந்து சஜித் பிரேமதாஸ தலைவராக உருவாகியுள்ளார் - என்றார். (ஐ)

## சு.க. - பெரமுன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை எடுத்துள்ளோம் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்றிருந்த பஸில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் தேர்தலில் ஒன்றாகக் களமிறங்குவதற்கு காரணமாக இருந்த எமது கட்சியின் தலைவர் மஹிந்தவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இன்று (நேற்று) காலை, என்னிடம் அரசியல், கல்வி ஆகியவற்றில் புலமைப்பட்ட ஒருவர் கேட்டார், இதுவரை காலமும் எந்த தொரு கட்சியுடன் இணைந்து போட்டியிடமாட்டேன் என்று கூறிய நீங்கள் இன்று ஏன் ஒன்றிணைகின்றீர்கள் என்றார்.

அதற்கு நான் கூறினேன். இவை எல்லாவற்றையும் விட நாட்டு மக்களே மிகவும் அத்தியாவசியமானவர்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய சேவையைக்காட்டிலும் வேறு ஒன்றும் இல்லை என்றேன்.

அந்தவகையில் இரு கட்சிகளிலும் நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஆதரவு நிறைந்தவர்கள் இருக்கின்றார்கள். மேலும் பொதுஜன பெரமுன போன்ற கட்சியை இலங்கையில் மட்டுமல்ல வேறு எந்த நாட்டிலும் இத்தகைய சிறந்த தொரு கட்சியைக் காண முடியாது.

பெரும்பாலான மக்கள், இரு கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் எனக் கூறினர். அதனடிப்படையில்தான் தற்போது நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

எனவே நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாவை அமர்த்துவதற்கு அதற்கான செயற்பாடுகளை இருகட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேரினவாதப் பேச்சு இது!

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தமது முதலாவது பிரசாரக் கூட்டத்திலேயே தமது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கி விட்டார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

தாம் ஓர் இராணுவ வீரர்தான், தமது போக்கு இராணுவக் கட்டமைப்பு ரீதியாகத்தான் இருக்கும் என்பதை அவர் நிரூபிக்க முயன்றிருக்கின்றார்.

**"நான் அதிகாரத்துக்கு வந்தால் 24 மணி நேரத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் பணி உடனடியாக ஆரம்பமாகும்"** – என்று அறிவித்திருக்கின்றார் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸா.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ அப்படித் தெரிவிக்கவில்லை.

தாம் பதவிக்கு வந்தால், அன்றே, நீதிமுறையற்ற விதத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்துப் படையினரும் விடுவிக்கப்படுவார்கள் என்று அவர் அறிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி நடக்கின்றது. எதிர்பார்க்கப்பட்டபடி எல்லாம் நடைபெறுமானால் பெரும்பாலும் 17 ஆம் திகதி காலையில் முடிவுகள் வெளியிடப்படக் கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

வேட்பாளர் எவரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளைப் பெறாவிட்டால், இரண்டாவது வாக்குக் கணக்கெடுப்பு நடத்த வேண்டியிருக்கும். அப்படிச் செய்வதனால் 17 ஆம் திகதி மாலைக்குப் பின்னர்தான் தேர்தல் முடிவுகள் வரும்; வரமுடியும்.

**"ஜனாதிபதித் தேர்தலில் நான் வென்றால் சிறைகளில் உள்ள சகல படையினரும் நவம்பர் 17 ஆம் திகதி காலையில் விடுதலையாவர்!"** – என்று அறிவித்திருக்கின்றார் கோட்டாபய.

தமது முதல் பிரசாரக் கூட்டத்தில் அவர் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு இது.

இதன்படி –

முதல் சுற்று வாக்குக் கணக்கெடுப்பிலேயே தாம் வெற்றி பெறுவார் என்று அவர் உறுதியாக நம்புகின்றார்.

முடிவு காலையில் அறிவிக்கப்பட்டமையோடு தாம் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார் என அவர் எதிர்பார்கின்றார்.

பதவியேற்ற கையோடே சிறைகளில் உள்ள அனைத்துப் படையினரையும் தமது உத்தரவு மூலம் சுதந்திரப் பறவைகளாகி விட முடியும், அவர்களை விடுதலை செய்து விடலாம் என அவர் நம்புகின்றார்.

ஐம்பதுகளின் நடுப்பகுதியில் இப்படி ஒரு பேரினவாதப் பூதத்தைக் கிளப்பித்தான் எஸ்.டபிள்யூ, ஆர்.டி.பண்டாரநாயக்கா அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் தனிச் சிங்களம் சட்டம் கொண்டுவரப்படும் என்ற பேரினவாதப் பூதத்தை உசுப்பி விட்டுக் கிளப்பித்தான் அவர் ஆட்சியைப் பிடித்தார்.

அது போன்றதுதான் ஜனாதிபதித் தேர்தல் முடிவு வந்ததும், அதுவரை தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினர் எல்லாம் உடனடியாக – எந்தத் தாமதமுமின்றி – விடுவிக்கப்படுவார்கள் என்ற கோட்டபாயவின் இந்த அறிவிப்பும்.

நீதிமன்ற விசாரணை முறைமைகளில் கீழ் – சட்டத்தின் பிரகாரம் – அவர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்படிச் சிறையில் இருக்கும் படையினரின் எண்ணிக்கை ஒரு சில டசின்கள்தாம். அவர்கள் பல்வேறு வழக்குகளின் பேரில் நீதிமன்ற உத்தரவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசியல் ரீதியாக அவர்களை விடுவிக்கும் கொள்கை நிலைப்பாட்டை புதிய ஜனாதிபதியாக வருபவர் எடுத்தாலும் கூட அவர் தம் எண்ணப்படி – தம்மிஷ்டப்படி – அந்தக் கைதிகளை விடுவிக்க முடியாது.

சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று, சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களின் ஒப்புதலோடுதான் அவர்களை விடுவிக்க முடியும்.

அப்படி இல்லாமல் தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அவர்கள் எல்லோரும் சுதந்திரப் பறவைகளாக மாறுவர் என்று கோட்டபாய ராஜபக்ஷ கூறுவது, அவர் பதவியேற்று அதிகாரத்தைப் பெற்றதும், நீதி – சட்டத் துறைக்குள் புகுந்து, விளையாடப் போகின்றார் என்ற பேரச்சத்தையே ஏற்படுத்தி நிற்கின்றது.

அவர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டதுமே நீதித்துறை பந்தாடப்படப் போகின்றது என்பதற்கான கட்டியம் அறிவிப்பாக கோட்டாவின் இந்த உரை – கருத்து – அர்த்தப்படுத்தப்படக் கூடியது.

உலகில் மிக மோசமான – மிலேச்சத்தனமான – குரூரமான – மனித நாகரிகங்களுக்கே ஒவ்வாத – ஒரு சட்டம் என்று சர்வதேச சமூகத்தினால் கருதப்படுகின்ற 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்' கீழ் குற்றவாளிகளாக்கப்பட்டும், சந்தேக நபர்களாகக் கருதப்பட்டும் பல பத்தாண்டுகள் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து ஏதும் குறிப்பிடாமல், சாதாரண இலங்கைச் சட்டங்களின் கீழ் விளக்கமறியலில் இருக்கும் படையினர் குறித்து மட்டும் சிந்திக்கும் – கருத்து வெளியிடும் – கோட்டாவின் போக்கு, இலங்கைத் தீவில் தமிழர்களின் எதிர்காலம் மிக மோசமாக அமையும் என்பதற்கான கட்டியமும் கூட.

### நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரம்:

# இனமுரண்பாட்டைத் தடுப்பதற்காகவே தீர்ப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸார் தெரிவிப்பு





வவுனியா, ஒக். 11

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஏற்படவிருந்த இனமுரண்பாட்டைத் தடுப்பதற்காகவே நீதிமன்றத் தீர்ப்பைப் கவனத்தில் கொள்ளவில்லையென முல்லைத்தீவு பொலிஸார் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணியில் நீதிமன்றத்தின் கட்டளையை மீறி பௌத்த பிக்குவின் சடலத்தை எரியூட்டியமை மற்றும் பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அடாவடி தொடர்பில் வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டைச் செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகிகளும், தமிழர் மரபுரிமைப் பேரவையினரும் இணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொண்டிருந்தனர். கடந்த மாதம் 25ஆம் திகதி இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணை வவுனியா பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்றிருந்தது.

இந்த விசாரணைக்கு ஆலயத்தின் நிர்வாகம் சார்பில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணி ந.அனிஸ் கருத்து தெரிவித்தபோது –

இந்தச் சம்பவத்தில் நீதிமன்றின் கட்டளை மீறப்பட்டுள்ளது என்று எம்மால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனைப் பொலிஸ் தரப்பினர் ஏற்று கொண்டுள்ளனர். அன்றைய தினம் நீதிமன்றின் கட்டளையை அமுல்படுத்துவதைவிட இன முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் நீதிமன்றக் கட்டளையை மீறியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அன்றைய தினம் வருகை தந்திருந்த பௌத்த தேரர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் விசாரணையில் கூறினர் – என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் –

இந்தச் சம்பவத்தில் மக்கள் மீதான தாக்குதலைத் தாம் மேற்கொள்ளவில்லை என்றும் தங்களுக்கும் அதற்கும் பொறுப்பில்லை என்பதையும் பொலிஸார் ஆணிதரமாக தெரிவித்தார்கள். எனினும் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக ஒளிப்பதிவுக் காட்சிகளை உங்களுக்குச் சமர்ப்பித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா என பொலிஸ் அதிகாரிகளிடம் எம்மால் கேட்கப்பட்டது. தகுந்த ஆதாரங்களை வழங்கினால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். அத்துடன் நீதிமன்ற கட்டளையை மீறியதைப் பொலிஸார் ஏற்று கொண்டுள்ளனர். எனினும் அவர்கள் நழுவிச் செல்லும் போக்கை காணக்கூடியதாக இருந்தது. நீதிமன்றக் கட்டளையை மீறுவதற்கு பௌத்த பிக்குகளின் மேலாதிக்கம்தான் காரணம் எனவும், அவர்களது செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டதாகவும் பொலிஸார் சொன்னார்கள்.

பொலிஸாரின் பக்கச் சார்பான நடவடிக்கையினாலேதான் இது நடைபெற்றது. எரிப்பு நடவடிக்கைகளைச் சிங்கள மக்களும், பௌத்த தேரர்களும் மேற்கொள்ளும்போது காலை 10 மணி தொடக்கம்12.30 மணி வரை பொலிஸார் வேடிக்கை பார்த்துகொண்டிருந்தமையுடன், அவர் களுக்கு உதவிகளையும் வழங்கியிருந்தனர். நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை முடிவை எடுக்கக்கூடாது என்று சொல்லித் தடுக்காமல், கைகட்டி நின்ற பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பாக நாம் மனித உரிமை ஆணைக்குழுவில் சுட்டிகாட்டினோம். அதனை அவர்கள் ஏற்று கொண்டார்கள்.

இதேவேளை சட்டத்தை மீறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸார் விசாரணையின்போது தெரிவித்தனர். எனினும் சட்டத்தை மீறிய உங்களுக்கு அவர்களை விசாரிப்பதற்கு அருகதையில்லை. எனவே வேறு மாவட்டங்களில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் அந்த விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் அங்கு தெரிவித்திருந்தோம் – என்றனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆர். பிரியதர்சன கருத்து தெரிவிக்கையில் –

நீராவியடி ஆலய விடயம் தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் எமக்கு கிடைக்க பெற்றிருந்தன. குறிப்பாக ஆலய வளாகத்தில் பிக்குவின் உடலை எரித்தமை, பொலிஸார் பொதுமக்களைத் தாக்கியமை, நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தாமை போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. அது தொடர்பான விசாரணைக்கு இரு தரப்பும் அழைக்கபட்டனர். விசாரணையின் பிரகாரம் நீதிமன்றத் தீர்ப்பு அமுல்படுத்தப்படாமையைப் பொலிஸார் ஏற்றுக்கொண்டனர். அத்துடன் பொதுமக்களைப் பொலிஸார் தாக்கியமை தொடர்பாக ஆதாரங்களைச் சமர்பித்தால் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததுடன் இந்தச் சம்பவத்தின்போது சட்டவிரோதமாக செயற்பட்டவர்களுக்கு நீதிமன்ற உத்தரவுடன் மேலதிக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகப் பொலிஸ் அதிகாரிகள் எமக்கு தெரிவித்துள்ளனர் – என்றார்.

இந்த விசாரணையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் முன்னிலையாகியிருந்தனர்.

(ஐ – 100)

## தபால் மூல வாக்களிப்புக்கு 7 இலட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதி தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 7 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் பி.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் தற்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத மற்றும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை, ஜனாதிபதி தேர்தலுக்காக தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 31 ஆம் திகதியும் அடுத்த மாதம் 1 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

**நாளை** 12.10.2019 சனிக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி காலை 6.50 வரை
திதி : சதுர்த்தசி பி.இ 1.18 வரை
நடேசரபிஷேகம்
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 – 4.32

# ஆசிரியர் தினத்தை முன்மாதிரியாக கொண்டாடிய வவுனியா பாடசாலை







வவுனியா, ஒக். 11

ஆசிரியர் தினத்தை முன்மாதிரியாக மர நடுகை மூலம் வவுனியா அல் – இக்பால் மகாவித்தியாலயம் கொண்டாடியுள்ளது.

ஒக்ரோபர் 6 ஆம் திகதி ஆசிரியர் தினம் இலங்கையில் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மரநடுகை மூலம் அந்தத் தினத்தை வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களும், மாணவர்களும் கொண்டாடினர்.

மாணவர்களின் உதவியுடன் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலைச் சூழலில் 50 மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. இதனை பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத், பிரதி அதிபர் எம்.ராசிக் மற்றும் ஆசிரியர்கள் நாட்டி வைத்தனர். (ஐ – 100)

## வவுனியாவில் ஓட்டோச் சாரதி ஒருவர் கடத்திச் சென்று எரித்துப் படுகொலை!

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியாவில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம்காணாமற்போனார். அவரது சடலம் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கடத்திச் செல்லப்பட்டுக்கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தடயங்களை வைத்து பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கள்ளிக்குளம் பகுதியிலுள்ள பற்றைக்குள் ளிலிருந்து அவர் நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த சுகந்தன் (வயது - 27) என்ற இளம் குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கோவில்குளம் சந்தியில் நின்று ஓட்டோ வாடகைக்குச் செலுத்தி வந்த அவர் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வவுனியா நகருக்குப்பயணித்தபோது காணாமற்போனார் என்று உறவினர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இளம் குடும்பத்தலைவர் இறுதியாக வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் நின்றுள்ளார் என அவரது தொலைபேசித் தரவுகள் (ஜி.பி.எஸ்.) வெளிக்காட்டியுள்ளன.

அதனடிப்படையில் ஓட்டோ ஓட்டுநர்கள், பொலிஸார் முன்னெடுத்த தேடுதலின் அடிப்படையில் கள்ளிக்காடு பற்றைக் காணிக்குள்ளிலிருந்து இளம் குடும்பத் தலைவர் எரியூட்டப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## வீதிப் போக்குவரத்து தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு





வடக்கு ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய வீதிப் போக்குவரத்து தொடர்பில் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய மாணவர்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம்முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண வீதிப் பாதுகாப்பு வாரம் ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பணிப்புக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வடமாகாண சாலைப் பாதுகாப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்துப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வீதி பாதுகாப்பு வாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. (ஐ – 100)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

நந்தாவில், கொக்குவில், ஞானபண்டிதர் பாடசாலை, பிரம்படி, மாவடி, மருத்துவபீட பிரதேசம், மருத்துவபீட அரங்கம், செல்வம கால், புநாறிமடத்தடி, சிவப்பிரகாசம் வீதி, கோம்பையன்மணல், பெருங்குளம் சாவகச்சேரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி பிரதேசம், பத்தனை கேணியடி ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வாக்குச்சீட்டுகள் அச்சிடல் ஆரம்பம்

கொழும்பு, ஒக் . 11

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் மிக நீளமான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2.2 அடி நீளமுடைய இந்த வாக்குச்சீட்டு மாதிரி ஒப்புநோக்குவதற்காக தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு கோடி 60 இலட்சம் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படவுள்ளன. 35 வேட்பாளர்களை உள்ளடக்கிய இந்த வாக்குச்சீட்டின் நீளம் 2.2 அடியாகும். தபால்மூல வாக்களிப்பு தினத்துக்கு 10 நாள்கள் முன்னதாக வாக்குச்சீட்டை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுள்ளது என்று அரச அச்சுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)



# பிளாஸ்டிக் கழிவு பொருள்களை கொடுத்தால் உணவு கிடைக்கும்

## இந்தியாவில் சட்டீஸ்கரில் புதுமையான திட்டம்



சட்டீஸ்கர் மாநிலத்தில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொடுத்தால் உணவு கொடுக்கும் 'கார்பேஜ் கேஃபே' என்ற உணவகம் தொடங்கப்பட்டுள்ளது.

சில பிளாஸ்டிக் பொருள்களைக் கொடுத்தால் உணவு கிடைப்பது என்பது நினைத்துப் பார்த்திராத ஒன்றுதான் என்றாலும் சட்டீஸ்கர் மாநிலம் அம்பிகாபூர் நகரத்தில் அதுநடை முறைக்கு வந்துள்ளது. நாட்டின் 2 ஆவது சுத்தமான நகரமாக அறிவிக்கப் பட்ட அம்பிகாபூர் இந்த ஆண்டுக்கானஸ்வச்சர்வேக்ன்விருதையும் பெற்றுள் ளது.

இந்நிலையில் பிளாஸ்டிக் ஒழிப்பில் மக்கள் பங்கு பெறுவதை ஊக்குவிக்க அம்பிகாபூர் நகராட்சி புதுமையைப் புகுத்தியுள்ளது.

பயன்படுத்தித்தூக்கியெறியும் பிளாஸ்டிக் பொருள்களை கொண்டு சென்றால் அவற்றுக்கு மாற்றாக உணவு வழங்கும் தனித்துவமான கார்பேஜ் கேஃபே என்ற உணவகத்தை அங்கு மாநில சுகாதாரத் துறை அமைச்சர் சிங்தியோ தொடங்கி வைத்தார்.

பிளாஸ்டிக் கொண்டு வருபவர்களுக்கு உணவு வழங்க அம்பிகாபூர் நகராட்சி ஒப்பந்த அடிப்படையில் தனியார் உணவகம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த உணவகத்தில் இருந்து சற்று தொலைவில் உள்ள பிளாஸ்டிக் சேகரிப்பு மையத்தில் கொடுக்கப்படும் ஒவ்வொரு அரைக் கிலோ பிளாஸ்டிக்குக்கும் 40 ரூபா அல்லது 60 ரூபா மதிப்புள்ள 'டோக்கன்' வழங்கப்படுகிறது. பிளாஸ்டிக்குடன் வருபவர்களுக்காக இந்த உணவகத்தில் இரண்டு மேஜைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.







# பொலிஸார் பொதுமக்களின் நண்பர்களாக மாறவேண்டும்

## பிரதமர் மோடி அறிவுரை

புதுடில்லி,ஒக்.11



பொலிஸார் பொதுமக்களின் நண்பர்களாக மாற வேண்டும் என்று பயிற்சி ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி அறிவுரை வழங்கினார்.

2018 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். பணியில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் 126 இளம் அதிகாரிகள் பிரதமர் மோடியை டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்தனர். அவர்களுடன் மோடி கலந்துரையாடினார். அவர்களுடன் உரையாடும்போது அவர் கூறியவை வருமாறு:-

உங்களை நீங்கள் நம்ப வேண்டும். அலுவலகப் பயிற்சியுடன், தன்னம்பிக்கையுடன் கூடிய உள்ளார்ந்த ஆற்றலும்தான் தினந்தோறும் நீங்கள் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள ஆற்றலை தரும். குற்றங்களைத் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதிலும், நவீன பொலிஸ் துறையை உருவாக்குவதில் தொழில்நுட்பங்களை முன்னிலைப்படுத்துவதிலும் பொலிஸார் முக்கிய பங்காற்ற வேண்டும்.

பொலிஸார் தங்கள் தினசரி பணியில் சேவை மற்றும் அர்ப்பணிப்பை மனதிற் கொண்டு செயலாற்ற வேண்டும். குறிப்பாக சாதாரண குடிமக்களுடன் தங்களுக்கு உள்ள தொடர்பின் முக்கியத்துவத்தை பொலிஸார் உணர வேண்டும்.

பொலிஸ் துறை பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டத்தை ஒவ்வொரு அதிகாரியும் உணர்ந்து கொள்வதுடன், தங்களைப் பொது மக்கள் எளிதில் அணுகும் நிலையையும் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் பொலிஸார் பொதுமக்களின் நண்பர்களாக மாற வேண்டும்.

சிறப்புமிக்க தேசத்தை உருவாக்கும் வகையில் அயராது உழைத்து வரும் இளம் அதிகாரிகளாகிய உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். 2018 ஆம் ஆண்டுக்கான இந்தப் பயிற்சிப் பிரிவில் ஏராளமான பெண்கள் இடம்பெற்றிருக்கின்றமை மகிழ்ச்சியை அளிக்கிறன. இது பொலிஸ் துறை மற்றும் நாட்டின் கட்டுமானத்தில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். - இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

இந்த சந்திப்பின்போது, நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களை மேம்படுத்தும் பணியில் பொலிஸாரின் பங்கு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

(உ)

# சட்டவிரோதமாக குடியேறியவர்கள்

## வெளியேற்றப்படுவர் என்கிறார் அமித்ஷா

இந்தியாவிற்குள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் 2024 ஆம் ஆண்டிற்குள் வெளியேற்றப்படுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சரும், பா.ஜ.க. தலைவருமான அமித்ஷா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலத்தில் வரும் 21 ஆம் திகதி சட்டசபை தேர்தல் நடைபெறுவதை ஒட்டி பா.ஜ.க. தலைவரும், உள்துறை அமைச்சருமான அமித்ஷா கைதால் தொகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது பேசிய அமித்ஷா, சட்ட விரோதமாக குடியேறிய ஒவ்வொரு வரையும் அவரவர் நாட்டிற்கே அனுப்புவதுதான் பா.ஜ.கவின் கொள்கை என்றும், 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குள் அனுமதியின்றி இந்தியாவிற்குள் குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.



மேலும், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழக்கும் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டதை சுட்டிக்காட்டி பேசிய அமித் ஷா, அதனைக் காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறதா, இல்லையா என்பதை ராகுல்காந்தி தெளிவுப்படுத்த வேண்டும் என்று பேசினார்.

தொடர்ந்து பேசிய அமித் ஷா, பிரான்ஸில் இருந்து பெறப்பட்ட ரபேல் விமானத்திற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சாஸ்திர பூஜை செய்தமையை காங்கிரஸ் கட்சி கிண்டல் செய்வதாகவும் இந்தியப் பாரம்பரியம் எப்போதுமே காங்கிரஸ் கட்சிக்கு கிண்டலாகத்தான் தெரியும் என்றும் சாடினார்.

# ஜேர்மனியில் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு; 2 பேர் பலி

பேர்லின்,ஒக்.11

ஜேர்மனியில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

ஜேர்மனி நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது ஹாலே நகரம். இங்குள்ள தேவாலயம் அருகே மர்ம நபர்கள் நேற்றுமுன்தினம் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் 2 பேர் பரிதாபமாக பலியாகினர். துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபர்களில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், தப்பி ஓடிய மற்றவர்கள் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் பதுங்கி இருக்கலாம் என பதால் பொலிஸார் தேடுதல் நடத்தி வெளிகின்றனர்.



# பாகிஸ்தானுடனான சீனாவின் நட்புறவு வலுவானது என்கிறார் அதிபர் ஜின்பிங்



பீஜிங்,ஒக்.11

சர்வதேச மற்றும் உள்நாட்டு சூழ்நிலைகளில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும், சீனா மற்றும் பாகிஸ்தான் இடையிலான நட்புறவு உடைக்க முடியாத வகையில் வலுவானதாக இருக்கும் என்று சீன அதிபர் ஜின்பிங் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் 2 நாள் அரசுமுறைப் பயணமாக சீனா சென்றுள்ளார். இவர் பிரதமராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பிறகு 3 ஆவது முறையாக சீனா சென்று இருக்கிறார். செவ்வாய்க்கிழமை சீனா சென்றடைந்த இம்ரான் கானுக்கு இராணுவ மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்நாட்டின் அதிபர் ஜின்பிங் மற்றும் பிரதமர் லீ கெகியாங் ஆகியோரை இம்ரான்கான் தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதில் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. மேலும் ஜின்பிங் மற்றும் இம்ரான்கான் முன்னிலையில் இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த நிலையில் தலைநகர் பீஜிங்கில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் ஜின்பிங்கை இம்ரான் கான் நேற்றுமுன்தினம் மீண்டும் சந்தித்தார். அப்போது இருநாட்டு தலைவர்களும் இருதரப்பு உறவைப் பலப்படுத்துவது குறித்துப் பேச்சு நடத்தினர். அப்போது சீனா மற்றும் பாகிஸ்தான் இடையிலான நட்புறவு எப்போதும் உடைக்க முடியாததாக இருக்கும் என இம்ரான்கானுக்கு ஜின்பிங் உறுதியளித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், “சர்வதேச மற்றும் உள்நாட்டு சூழ்நிலைகளில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும், சீனா மற்றும் பாகிஸ்தான் இடையிலான நட்புறவு உடைக்க முடியாத வகையில் வலுவானதாக இருக்கும். இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு நீண்ட ஆயுளை கொண்டது” என கூறினார்.

# 35 ஆண்டுகளில் 93 கொலைகள்

## அமெரிக்காவை அதிரவைத்த கொடூரக் கொலைகாரன்

நியூயோர்க்,ஒக்11

1970 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான 35 ஆண்டுகளில் 93 பெண்களைத் தாம் கொலை செய்தார் எனக் கூறி சாமுவேல் லிட்டில் என்பவர் அதிரவைத்துள்ளார்.

அமெரிக்காவின் கென்டகி மாகாணத்தை சேர்ந்தவர் சாமுவேல் மெக்டவல் (வயது 79). அவரது உயரம் காரணமாக அவரை ‘சாமுவேல் லிட்டில்’ என்று அழைக்கின்றனர். முன்னாள் குத்துச் சண்டை வீரரான இவர் கடந்த 2012 ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.


விசாரணையின் ஒரு பகுதியாக அவருக்கு மரபணு பரிசோதனை செய்த போது, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1987 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 3 பெண்களை அவர் கொலை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும் சில சந்தேக மரணங்கள் தொடர்பாக சாமுவேல் லிட்டிலிடம் மத்திய புலனாய்வு குழு (எவ்.பி.ஐ) விசாரணை நடத்தி வந்தது. இந்த நீண்ட விசாரணையில் அதிர வைக்கும் பல உண்மைகள் வெளியாகி உள்ளன.

1970 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான 35 ஆண்டுகளில் 93 பெண்களைத் தாம் கொலை செய்தார் எனக் கூறி சாமுவேல் லிட்டில் அதிரவைத்துள்ளார்.

அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் நடத்திய விசாரணையில் சாமுவேல் லிட்டில் 50 கொலைகள் செய்தமையை மத்திய புலனாய்வுக் குழு உறுதி செய்துள்ளது. மற்ற கொலைகளுக்கான ஆதாரங்களையும் சேகரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.


சாமுவேல் லிட்டில் அளித்த வாக்குமூலத்தில், அவர் பெரும்



பாலும் கறுப்பினப் பெண்களைக் குறிவைத்தே கொலைகளை மேற்கொண்டமை தெரிய வந் துள்ளது.

அதிலும் குறிப்பாக பாலியல் தொழிலில் ஈடுபட்ட மற்றும் போதைக்கு அடிமையான பெண்களையே அவர் அதிகம் கொலை செய்துள்ளார்.

# கடலுக்குள் மிதந்து வந்த பெரிய ஸ்குவிட் முட்டை



நோர்வேயில் ஆழ்கடல் பகுதியில் ஜெயன்ட் ஸ்குவிட் எனப்படும் கணவாய் மீனின் பிரமாண்டமான முட்டையை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆர்ஸ்டப்ஜோர்டன் என்ற பகுதியில் 5 கடலாய்வாளர்கள் கடலடி ஆய்வை நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது கடலுக்குள் ஏற்பட்ட நீரோட்டத்தில் கண்ணாடி போன்ற ஒரு பொருள் ஆடி அசைந்து வந்தது.

சுமார் 13 அடி விட்டம் கொண்ட அந்தப் பொருள் முட்டை என்பது தெரிய வந்ததால் ஆய்வாளர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தொடர்ந்து அந்த பிரமாண்ட முட்டையை ஆராய்ந்ததில் அது ஜெயன்ட் ஸ்குவிட் எனப்படும் கணவாய் மீனின் முட்டை என்பது தெரியவந்தது.

தற்போது இந்த முட்டையை இட்ட பிரமாண்ட ஸ்குவிட்டைத் தேடும் பணியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# சீன மருத்துவமனையில் தீ விபத்தில் ஐவர் சாவு!

பீஜிங்,ஒக்.11

சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீன நாட்டின் அன்குய் மாகாணத்தில் உள்ளது போசோவ் நகர். போசோவ் நகரின் குயாங் கவுண்டியில் உள்ள ஒரு நகர சுகாதார மையத்தில் நேற்று அதிகாலை 2 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து குறித்துத் தகவல் அறிந்து, விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் தீவிரமாகப் போராடித் தீயைக் கட்டுப்படுத்தினர். பின்னர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இதுவரை 5 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. தீ விபத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இந்தத் தீவிபத்துக் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# சாப்பாட்டில் தலைமுடி கிடந்தமையால் மனைவிக்கு மொட்டை அடித்த வாலிபர்



டாக்கா, ஒக்.11

சாப்பாட்டில் தலைமுடி இருந்ததால் தனது மனைவிக்கு வலுக்கட்டாயமாக மொட்டை அடித்த வாலிபரை பொலிஸார் கைது செய்தனர்.

வங்காளதேசத்தின் வடக்கு பகுதியில் ஜாய்புர்ஹட் மாவட்டத்தை சேர்ந்தவர் பப்லு மொண்டல் (வயது 35). 23 வயதான இவரது மனைவி நேற்று முன்தினம் காலை வழக்கம் போல உணவு தயார் செய்து கணவருக்குக் கொடுத்தார். அந்த உணவில் தலைமுடி கிடந்தது.

இதனால் கடும் கோபம் அடைந்த பப்லு, கத்தியை எடுத்து தனது மனைவிக்கு வலுக்கட்டாயமாக மொட்டை அடித்தார். இது குறித்து அப்பகுதி மக்கள் பொலிஸுக்குத் தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் பொலிஸார் உடனடியாக பப்லுவை கைது செய்தனர். அவர் மீது ‘தானாக கடுமையான காயத்தை ஏற்படுத்துதல்’ பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், இந்த பிரிவின் கீழ் அவருக்கு அதிகபட்சமாக 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

வங்காளதேசத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாலியல் குற்றங்களைத் தடுக்க கடுமையான சட்டங்கள் இருந்தாலும், பெண்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதை இந்த சம்பவம் உணர்த்துவதாக சமூக செயல்பாட்டாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம், அங்கு ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியர் மீது பாலியல் புகார் அளித்த 19 வயது பள்ளி மாணவி உயிருடன் எரித்துக்கொல்லப்பட்டமையும், அதனைத் தொடர்ந்து பெரும் போராட்டங்கள் அங்கு வெடித்தமையும் நினைவு கூரத்தக்கது.



பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com



# ராணி மகாராணி

## 2ஆம் எலிசபெத் மகாராணி

*(நேற்றைய தொடர்ச்சி...)*

1951 இல் தந்தையார் மன்னர் ஜோர்ஜ் VI நோய்வாய்ப்பட்ட வேளைகளில் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இள வயதிலேயே இவருக்குக் கிட்டியது. 1952 இல் தந்தையாரின் மரணத்தை தொடர்ந்து 1953 இல் பிரித்தானிய அரியணையை அலங்கரிக்கத் தொடங்கிய இவர் இன்று வரைக்கும் அதனை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

முடிசூட்டு வைபவமும் இவரது திருமணம் நிகழ்ந்த Westminster Abbey தேவாலயத்திலேயே இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. 1953 இல் பல பொதுநலவாய நாடுகளுக்கு விஜயம் செய்த அரச தம்பதியினர் தரை, கடல், ஆகாயம் என 40 ஆயிரம் மைல்கள் (65 ஆயிரம் கி.மீ) பயணம் செய்து இருந்தனர். சென்ற விடமெல்லாம் மக்கள் வெள்ளம் அலைமோதியது. உச்சமாக ஆஸ்திரேலிய பயணத்தின் போது அங்கிருந்த சனத்தொகையில் முக்கால் வாசிப்பேர் இவர்களை தரிசித்து இருந்தனர். இவரைப்போல அதிக நாடுகளுக்கு அதிகம் பயணம் செய்த சக்தி மிக்க தலைவர்கள் இல்லை என்றே கூறலாம்.

உயிர் அச்சுறுத்தல் இருந்த நாடுகளுக்கும் கலவரங்கள் இடம்பெற்ற பிரதேசங்களுக்கும் தயக்கமின்றி அமைதியாக விஜயம் செய்தவர் அவர். 1957 இல் ஐக்கிய அமெரிக்கா சென்ற வேளை ஐ.நா சபையில் உரையாற்றிவிட்டு கனடாவின் 23 வது நாடாளுமன்றத்தையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தார்.

1959 இலும் 1963 இலும் குழந்தைகளை கர்ப்பத்தில் சுமந்ததன் காரணமாக தவிர இன்று வரை அனைத்து பிரிட்டிஷ் நாடாளுமன்ற அமர்வுகளையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தவர் அவரே.

1981 இல் சாள்ஸ் – டயானா திருமணத்திற்கு இன்னும் ஆறு வாரங்கள் இருக்கையில் இராணுவ வர்ண நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தவேளை இவரை நோக்கி ஆறு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அவை வெற்று வேட்டுக்கள் எனப் பின்னர் தெரிய வந்தது. 1982 இல் பக்கிங்காம் அரண்மனையில் இராணியின் படுக்கை அறைக்குள் ஒருவன் புகுந்து கொண்டது பாதுகாப்புத் தரப்பினை கேள்விக் குறியாக்கி இருந்தது. நியூசிலாந்து பயணத்தின்போதும் இவர் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. காயம் கூட ஏற்படவில்லை. சுட்டவர்கள், புகுந்தவர்கள் பிரபலங்களாக சிறை சென்றார்கள். இவர் பிழைத்துக் கொண்டார். அவர்களது பெயரும் வரலாற்றில் இடம் பிடிக்காமலா போகும்?



இதைத்தான் வள்ளுவனும் . . . . .
கானமுயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது
(அன்றோ?)

1976 இல் கனடாவில் ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பித்து வைத்த மகாராணியார் மீண்டும் 2012 இல் லண்டனில் அதனை ஆரம்பித்து வைத்தார். ஒருவர் இரண்டுமுறை அதனை ஆரம்பித்து வைத்தார் என்றால் அவர் இவர்தான்.

2012 அவரது தலைமைத்துவத்தின் அறுபது ஆண்டுகள் நிறைவு வைரவிழாச் செய்தியில் மக்கள் சேவைக்குத் தன்னை மேலும் அர்ப்பணிப்பதாகவும், ஒற்றுமை, நட்புணர்வு வழிவந்த கடந்தகால வலுவை நினைப்பதாகவும் தெரிவித்து, 1952 முதல் இந்த 60 ஆண்டுகளில் சாதித்தவைக்காக நன்றியும் தெரிவித்தார். அப்பால் ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன.

2022 இல் 96 வது வயதில் தனது 70 ஆண்டுகால ஆட்சியை அவர் பூர்த்திசெய்ய இருக்கிறார்.

அரச குடும்பத்தினரின் நடவடிக்கைகள் பற்றியும் அரண்மனை உள் விவகாரங்கள் பற்றியும் அடிக்கடி பத்திரிகைகள் கிளறவும் மூக்கை நுழைக்கவுமே செய்தன. ஆனால் எதற்கும் பதில் கிடைப்பதில்லை.

அன்னப் பறவைகள் அவரது செல்லப் பறவைகள். மாளிகை தடாகத்தில் அவற்றைக் காணலாம். குழந்தைகள் பலரை தத்தெடுத்து வளர்ப்பதும் அவரது வழமை.

அண்மையில் (2019) அவரது கணவர் 97 வயதான இளவரசர் பிலிப் காரை ஓட்டிச் செல்கையில் அது பிறிதொரு காருடன் மோதி விபத்தில் சிக்கியது. இவரது கார் தலைகீழாக கவிண்டு விட்டது. அதிர்ச்சியில் உறைந்திருந்த இளவரசர் காயங்கள் ஏதுமின்றி மீட்கப் பட்டிருந்தார். அவர் தனக்காக சாரதியை வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. 2016 இல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தம்பதிகளை அழைத்துச் சென்றபோதும் தானே காரைச் செலுத்தியவர் அவர்.

பொதுவாக அதிகாரிகள் தாமே காரைச் செலுத்துவதில் ஒரு வசதி உண்டு. சாரதியை வைத்துக் கொண்டு உயர் மட்ட அல்லது அந்தரங்க விடயங்களை பயணப் பொழுதில் பேசிக்கொள்ள முடியாது.

வாரிசுக்களுடன் ஒன்றாக பயணம் செய்யும் நடைமுறையை அரச குடும்பத்தினர் தவிர்க்க வேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது. இதனால் ஒரு தனி விபத்தில் ஆட்சிக்கு முடிவு என்ற பங்கம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

விருந்துகளில் உணவு பரிமாறப்படும் போது மகாராணியின் கோப்பை முதலே தீர்மானிக்கப்படுவதில்லை. எனவே அவருடைய உணவில் என்று தனிப்பட விஷம் கலப்பது சாத்தியமாகாது.

பிரித்தானிய நாடாளுமன்றிற்கும் முடியாட்சிக்கும் இடையில் முறுகல் நிலைகள் சில சமயங்களில் எழுவதுண்டு. எதற்கும் ஒரு முன்னேற்பாடாக ஒரு பிரதிநிதியை மாளிகையில் பணயம் வைத்தே மகாராணி பாராளுமன்றம் செல்லும் வழமை உள்ளது. அவர் பாதுகாப்பாக மீண்ட பின்னர்தான் பணயம் வைக்கப் பட்டவர் மீள முடியும். ஆனாலும் மாளிகையில் தங்கி இருக்கும் போது அவருக்கு ராஜ உபசாரம்தான்.

மகாராணி கைப்பையை கையாளும் முறையில் பல சமிக்ஜைகளை வெளிப்படுத்துவார். அதனை அவர் கைமாற்றும் போது கலந்துரையாடல் நிறைவுபெறுகிறது என்பது பாதுகாப்பு தரப்பினருக்கு புரிந்துவிடும்.

உணவு வேளையில் மகாராணியார் நிறுத்தும் பட்சத்தில் ஏனையவர்கள் அனைவரும் உண்பதை குடிப்பதை நிறுத்தி விடுகிறார்கள். அப்பால் அடுத்த வேளைக்கு காத்திருக்க வேண்டியதுதான்.

அரச குடும்பத்தினர் அரசியல் பேசுவதில்லை. பக்கம் சார்வதில்லை. நடுநிலையானவர்கள் என்ற விதி இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அவர்கள் வாக்களிப்பதும் இல்லை.

வெளிநாட்டு பயணங்களின்போது அரச குடும்பத்தினர் கறுப்பு ஆடைகளையே பயன்படுத்துகிறார்கள். திருமணங்களின்போது மணப்பெண்ணின் ஆடை வெள்ளை நிறமாக இருக்கும்.

அரச குடும்பத்தினர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் விருந்தினர்கள் செல்பி எடுப்பதும் தழுவிக் கொள்வதும் தோளில் கை போடுவதும் தவிர்க்கப்படுகிறது.

நீண்ட ஆயுளின் இரகசியமோ என்னவோ தெரியாது மகாராணியின் காலை உணவில் பெரும்பாலும் மாற்றமே இருக்காது. தேனீருடன் சீரல் அல்லது கோன் பிளேக்ஸ் இன்னும் அவருக்கு அலுக்கவில்லை.

## பிரிட்டிஷ் முடியாட்சி

விருந்துகளிலோ சந்திப்புக்களிலோ மகாராணி யார் உட்கார்ந்த பின்னரே இளவரசர் அடுத்து பதவி வரிசைப்படி அரச குடும்பத்தினர் அடுத்து அதிதிகள் உட்கார முடியும். மகாரா ணியார் முதலில் வெளியேறிய பின்னரே அடுத்தவர்கள் வெளியேறலாம். எவரும் இராணிக்கு முதுகை காட்டி நிற்க நடக்க இயலாது.

அரச குடும்ப பெண்கள் உட்காரும்போது கால்களை ஒருங்கு சேரவைத்து உட்கார வேண்டும். வேண்டுமானால் கால்மேல் கால் போட்டுக் கொள்ளலாம்.

1944 இல் Corgi இன நாயான சுசான் இவரது செல்லப் பிராணி ஆனது. அன்றில் இருந்து சுசானின் வழித் தோன் றல்களே இன்றுவரை அரச குடும்பத்து நாய்கள். மதிய உணவு வேளையின் பின் னர் தனது நாயுடன் மகாராணியார் பக்கிங்காம் அரண்மனை வளாகத்தில் வலம் வருவது வழமை.

*(தொடரும்)*



# முல்லைத்தீவு மாவட்டத்தில் 75,381பேர் வாக்களிக்கத் தகுதி

## உதவித் தேர்தல் ஆணையாளர் காந்தீபன் தகவல்



முல்லைத்தீவு, ஒக். 11

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 75381 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 15 வாக்களிப்பு நிலையங்களில் 5,372 பேரும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 20 வாக்களிப்பு நிலையங்களில் 7,458 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 20 வாக்களிப்பு நிலையங்களில் 23,626 பேரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 49 வாக்களிப்புநிலையங்களில் 24,237பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 26 வாக்களிப்பு நிலையங்களில் 11,325 பேரும், மணலாறு பிரதேச செயலர் பிரிவில் 5 வாக்களிப்பு நிலையங்களில் 3,363 பேரும் என மொத்தமாக 135 வாக்களிப்புநிலையங்களில் வாக்கெடுப்பு இடம்பெற உள்ளதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் 75,381 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அதேபோன்று தபால் மூல வாக்களிப்புக்கான 2,845 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்ப கட்ட ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு தேர்தல் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்தலுக்கான ஆளணிகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான கணக்கெடுப்புகள் இடம்பெறுகின்றன.

தேர்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் 021 3204351 தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது எனும் 0212290030 தொலைநகல் இலக்கத்திற்கு முறையிடலாம் – என்றார். (ஐ)

# கோட்டாவுக்கு ஆதரவளிப்பது சு.கவை அழிக்க எடுத்த முடிவு

## குமார வெல்கம காட்டமான கருத்து

கொழும்பு, ஒக். 11

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ள முடிவு, சுதந்திரக் கட்சியை அழித்துவிடும் என்று எச்சரித்துள்ளார் அந்தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் அதனைக் கைவிட்டாலும், நான் பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளமாட்டேன்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனோ, பொதுஜன பெரமுனவுடனோ இணைந்து கொள்ளமாட்டேன். சுதந்திரமாக இருக்கவே எதிர்பார்க்கிறேன். தனியாக இந்த நிலைப்பாட்டை எடுக்கும் போது தனியாகவே பயணத்தை ஆரம்பிக்கவேண்டும்.

நான் எனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்குவதற்கு இரண்டுதலைப் பாம்பு அல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த



முடிவு சரியானது அல்ல. இது சுதந்திரக் கட்சியின் இருப்புக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.

பொதுஜன பெரமுனவுடன் விருப்பத்துடன் இணைந்து கொள்ள ஜனாதிபதி முடிவெடுக்கவில்லை. இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவு.

தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால், சுதந்திரக் கட்சியினர் அந்தக் கட்சியில் இணைவார்கள். அதற்குப் பின்னர் சுதந்திரக் கட்சி இருக்காது – என்றார்.

# எரிகாயங்களுக்குள்ளான இளம் பெண் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 11

தீயில் எரிந்த காயங்களுடன் நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்ப பெண் மரணமடைந்தார். கடந்த திங்கட்கிழமை மாலை வவுனியா கற்பகபுரம் பகுதியில் வசிக்கும் மனைவி தீயில் எரிந்த நிலையிலும், கணவன் தலையில் பலமாகத் தாக்கப்பட்ட நிலையிலும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மனைவி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அனுமதிக்கப்பட்டதுடன், கணவன் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சைக் குட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் தீயில் எரிந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த மனைவி நிதர்சன் தர்சினி (வயது – 34) சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். கணவன் சி.நிதர்சன் (27 வயது) தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# இலங்கை – மாலைதீவு நாடாளுமன்றங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுவதற்குப் பேச்சு







மாலே, ஒக். 11

இலங்கை – மாலைதீவு நாடாளுமன்றங்களை ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் ஆலோசனை மற்றும் பங்களிப்பை பகிர்ந்துகொள்வது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் மாலைதீவு சபாநாயகர் முஹம்மட் நசீட்டுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று முன் தினம் மாலைதீவு நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

சார்க் உயர்கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு பல்வேறு உயர்மட்ட கலந்துரையாடல்களில் கலந்துகொண்டார்.

கடந்த 8ஆம் திகதி மாலைதீவைச் சென்றடைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீமை அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஏ.பி. தோரதெனிய விமான நிலையில் வரவேற்றார்.

அதன்பின், மாலைதீவு உயர் கல்வி அமைச்சர் கலாநிதி இப்றாஹிம் ஹஸனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வாவும் கலந்துகொண்டார்.

மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட துறைகளில் தகுதியான மாலைதீவு மாணவர்களை இலங்கை பல்கலைக்கழகங்களில் உள்ளீர்ப்பது குறித்தும், எதிர்காலத்தில் உயர்கல்வி துறையில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்றங்கள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

அதனையடுத்து நேற்று முன் தினம் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான முஹம்மட் நசீட்டும் இடையில் பூர்வாங்கக் கலந்துரையாடலொன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இலங்கை – மாலைதீவு நாடாளுமன்றங்களை ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் ஆலோசனை மற்றும் பங்களிப்பை பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இரு நாடுகளின் நாடாளுமன்றங்களையும் ஒருங்கிணைத்து செயற்படுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

காலைக்கதிர் Kalaikathir



# சொந்த மண்ணில் பாகிஸ்தானை வெள்ளையடித்த இலங்கை அணி!




பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3 ஆவது இருபதுக்கு - 20 தொடரிலும் 13 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரை 3-0 என கைப்பற்றியுள்ளது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியுடன் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபதுக்கு - 20 தொடரில் விளையாடி வருகிறது.

இதில் ஒருநாள் தொடரினை இலங்கை அணி பறிகொடுத்திருந்தாலும், இருபதுக்கு - 20 தொடரில் இளம் வீரர்களின் அசத்தலான ஆட்டம் காரணமாக முதல் இரு போட்டிகளையும் வெற்றி கொண்டுள்ளது.

இந் நிலையில் இருபதுக்கு - 20 தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன் தினம் லாகூர் கடாபி மைதானத்தில் ஆரம்பமானது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணிதுடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்களை இழந்து 147 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணிசார்பாக ஓசத பெர்னான்டோ ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். இதேவேளை அறிமுகமான முதல் ரி-20 போட்டியில் அரைச்சதம் அடித்த இலங்கை வீரர் என்ற சாதனையை ஓசத பெர்னான்டோ




தன்வசபடுத்தியுள்ளார்.

இதேவேளை பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் அமீர் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் 148 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 13 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

அவ்வணி சார்பாக ஹாரிஸ் சோஹைல் 52 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் வணிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும் லஹிரு குமார 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

# மலிங்க தலைமையில் இலங்கை அணி ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளும்!

மலிங்க தலைமையில் இலங்கை அணி ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளும் என தெரிவுக்குழு தலைவரான அசந்த டி மெல் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், 'பாகிஸ்தானுக்கு எதிராக இலங்கை அணி அடைந்துள்ள தொடர் வெற்றி குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இளம் அணியொன்று இவ்வாறான தொடர் வெற்றியொன்றை ஈட்டியுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இருபதுக்கு 20 தொடரில் இலங்கை அணியை லசித் மாலிங்க வழிநடத்துவார் என எதிர்பார்க்கின்றேன்.

அதற்கு மேலதிகமாக மேலும் 3 வீரர்கள் அணியில் இடம்பெறலாம். நிச்சயமாக லசித் மாலிங்கவுடன் இன்னும் 2 அல்லது 3 வீரர்கள் அணியில் இடம்பெறுவார்கள்.

ஆஸ்திரேலிய தொடருக்கு இந்த போட்டிகள் சிறந்த பயிற்சியாக அமைந்துள்ளது. ஆஸ்தி



ரேலியாவுக்கு எதிராக 3 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடியதன் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தியாவை எதிர்த்தாடவுள்ளோம்.

உலகக்கிண்ண இருபதுக்கு20 தொடருக்கு முன்னர் 16 இருபதுக்கு 20 போட்டிகளில் நாம் விளையாடவுள்ளோம்.

20 - 20 உலகக் கிண்ணத்துக்கு முன்னர் தகுதிச்சுற்றில் விளையாடவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளதால் இந்த வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் இந்தப் போட்டிகளினூடாகச் சிறந்த குழாமொன்றை கட்டமைக்க முடியும். தற்போது விளையாடுவது போல விளையாடும் பட்சத்தில் உலகக்கிண்ணப் போட்டிகளில் வெற்றியீட்ட முடியும் - என்றார். (ஐ)

# சச்சினுக்கு இணையாக கிரிக்கெட் சாதனை புரியும் வீராங்கனை

மகளிர் கிரிக்கெட்டில் இந்திய மூத்த வீராங்கனை மிதாலி ராஜ் புதிய மைல்கல்லை எட்டி வியக்க வைத்துள்ளார்.

சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக கிரிக்கெட் ஆடி, மகளிர் கிரிக்கெட்டில் யாரும் தொடாத உயரத்தை தொட்டுள்ளார் மிதாலி ராஜ். கிட்டத்தட்ட மகளிர் கிரிக்கெட்டில் சச்சினுக்கு இணையான சாதனை என்று கூறப்படுகின்றது.

மிதாலி ராஜ் ஜூன் 1999இல் அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகம் ஆனவர். அப்போது முதல் கிரிக்கெட் ஆடி வரும் அவர் 20 ஆண்டுகளை கடந்து மகளிர் கிரிக்கெட்டில் உச்சத்தை தொட்டுள்ளார்.

ஆடவர் கிரிக்கெட்டில் சச்சின் 22 ஆண்டுகளுக்கும் மேலாக ஆடி முதல் இடத்தில் இருப்பது போலவே, மகளிர் கிரிக்கெட்டில் மிதாலி ராஜ் 20 ஆண்டுகளுக்கும் மேல் கிரிக்கெட் ஆடி முதல் இடத்தில் இருக்கிறார்.




தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில்தான் இந்த மைல்கல் சாதனையை பதிவு செய்துள்ளார் மிதாலி ராஜ். இந்தப் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்தது.

இதை ஆடவர் கிரிக்கெட்டையும் சேர்த்து கணக்கிட்டால், மிதாலி ராஜ் நான்காவது இடத்தில் இருக்கிறார். சச்சின் (22 ஆண்டுகள், 91 நாட்கள்), சனத் ஜெயசூர்யா (21 ஆண்டுகள் 184 நாட்கள்), ஜாவேத் மியான்தத் (20 ஆண்டுகள் 272 நாட்கள்) கிரிக்கெட் ஆடி முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.

அதே போல, ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் அடித்த சாதனையும் மிதாலி ராஜ் வசம் தான் உள்ளது. 204 போட்டிகளில் 6,731 ஓட்டங்கள் குவித்துள்ளார் அவர். 16 வயதில் தன் முதல் சதம் அடித்த மிதாலியின் சாதனை இன்று வரை யாரும் முறியடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகா எல்லையில் ரசல், ரொஷான்!



இந்திய - பாகிஸ்தான் போக்குவரத்து எல்லையான வாகாவுக்கு இலங்கை அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய வர்ணனையாளருமான ரசல் ஆர்னோல்ட் சென்றுள்ளார்.

அவருடன் மற்றுமொரு இலங்கையைச் சேர்ந்த வர்ணனையாளரான ரொஷான் அபேயசிங்கவும் வாகா எல்லை சென்றுள்ளார்.

இந்த விஜயம் தொடர்பிலான புகைப்படங்களை ரசல் ஆர்னோல்ட் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணியானது அங்கு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஒருநாள் மற்றும் 'ருவென்ரி 20' தொடர்களில் பங்கேற்கின்றது.

இந்தத் தொடரின் வர்ணனையாளர்களாக இலங்கையில் இருந்து சென்றிருக்கும் ஆர்னோல்ட் மற்றும் ரொஷான் ஆகியோரே வாகா எல்லை சென்று, அதனைப் பார்வையிட்டுள்ளனர்.

இந்திய மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு மிகவும் முக்கியமான பிரதேசமாக பார்க்கப்படும் வாகா எல்லைக்கு தான் சென்றிருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம் என ஆர்னோல்ட் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சாதனைப் பட்டியலில் இணைந்தார் கோஹ்லி!

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி, புதிய சாதனைப் பட்டியலில் இணைந்துள்ளார். தற்போது தென்னாபிரிக்கா அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் விராட் கோஹ்லி, வழிநடத்தும் ஐம்பதாவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

இதன்மூலம், 50 டெஸ்ட் போட்டிகளை வழிநடத்திய இந்திய அணித்தலைவர்கள் வரிசையில், முன்னாள் தலைவர் டோனியுடன், கோஹ்லி இரண்டாவதாக இணைந்துள்ளார்.

முன்னாள் தலைவரான டோனி, 60 டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவராக பணியாற்றி 27 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். தற்போதைய தலைவர் விராட் கோஹ்லி, 49 போட்டிகளுக்கு தலைமை தாங்கி, அதில் 29 முறை வெற்றி பெற்றுள்ளார்.

# மைத்திரியை ஆதரித்த தமிழர், முஸ்லிம்கள் கோட்டாபயவுக்கும் வாக்களிக்கவேண்டும்!

## இப்படிக் கோருகிறார் துமிந்த திஸநாயக்க



கொழும்பு, ஒக். 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வரலாற்றுக் காலம் தொடக்கம் ஆதரவு வழங்கி வரும் தமிழ் – முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக் கும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன் னாள் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப் பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இன, மத வேறுபாடு கிடையாது. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதி பதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் மீது நம்பிக்கை கொண்டே தமிழ் – முஸ்லிம் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து ஆட்சி மாற்றத்தை ஏற்ப டுத்தினார்கள். அன்று வழங்கிய ஆதரவை எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு அவர்கள் வழங்க வேண்டும். அமோக வாக்குகளினால் கோட்டாபயவை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தின் தீர்மா னத்துக்கு அமையவே பொதுஜன முன்னணியுடன் இணையத் தீர்மானித்தோம். ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு இரண்டு ஒப்பந்தங்களை பொதுஜன முன்னணியுடன் செய்து கொள்ளவுள்ளோம் – என்றார். (ஐ)

# எல்பிட்டிய தேர்தல் இன்று

கொழும்பு, ஒக். 11

எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலுக்கான பரப்புரை கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந் துள்ள நிலையில், இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 4 மணி வரை வாக்க ளிப்பு இடம்பெறவுள்ளது.

இந்த தேர்தலில் 53,384 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இன்று மாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்த தும், வாக்குகள் எண்ணும்பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, முடிவு அறிவிக்கப்படவுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபைக்கான 28 உறுப்பி னர்களை தெரிவு செய்வதற்காக இந்தத் தேர் தல் நடைபெறுகிறது.

இதில், 17 உறுப்பினர்கள் வட்டார அடிப்படையில் நேரடியாகவும் ஏனைய உறுப்பினர்கள் விகிதா சார முறைப்படியும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய ஐந்து கட்சிகள் போட்டியிடுகின்றன.

எதிர்வரும் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த தேர்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)






# கோட்டாவுக்கு ஆதரவா? மறுக்கின்றது இ.தொ.கா.

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலர் மஹிந்த அமரவீர அறிவித்தமை அடிப்படையற்றது என்று இ.தொ.கா. தெரிவித்துள் ளது.

இது தொடர்பாக இ.தொ.காவின் மூத்த உதவித் தலைவரும், பொருளாளருமான எம்.ராமேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக் கையில் –

பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை இ.தொ.கா. ஆதரிக்கவுள்ளதாக மஹிந்த அமரவீர கூறியுள்ளமை அடிப்படையற்றது. அவ்வாறான முடிவு எடுக்கப்படவில்லை.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவை இ.தொ.கா. ஆதரிக்க வுள்ளதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கின்றமையும் தவறான கருத்து.

இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் தொடர்ந்து பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

கட்சியின் நிறைவேற்றுக்குழு கூடிய இறுதி முடிவை எடுக்கும். வரும் 13ஆம் திகதி கட்சியின் முடிவு அறிவிக்கப்படும் – என் றார். (ஐ)

# திறப்பு விழாவுக்கு பலாலி தயார்!



யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாகப் பெயரிடப்பட் டுள்ள பலாலி விமான நிலையத்தின் முதற்கட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்துள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பிராந்திய விமான சேவைகளை நடத்துவதற்காக, எதிர்வரும் 17ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்காக, பலாலி விமான நிலையத்தைத் தரமுயர்த்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஓடுபாதையைத் தரமுயர்த்தும் பணிகளை மேற்கொண்டு வந்தது. சிவில் விமான சேவைகள் நிறுவனம், விமான நிலையத்துக்கான ஏனைய உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தும் பணிகளை முன்னெடுத்தது.

இந்த இரண்டு நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த தரமுயர்த்தல் பணிகள் நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளன எனப் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும் எல்லா அடிப்படை கட்டமைப்புப் கட்டுமானப் பணிகளும் நிறைவு செய்யப் பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# கடத்தல், காணாமற்போதல் வடபகுதியில் தொடர்கிறது!

## கண்டித்து வவுனியாவில் கவனவீர்ப்பு





வவுனியா, ஒக். 11

வடக்கில் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்படு தல் தொடர்வதாகக் குற்றம் சாட்டி காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவுகளால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை வவுனியாவில் முன்னெடுக்கப் பட்டது.

வவுனியா ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதி கார சபைக்கு முன்னால் 963 நாட்களாகச் சுழற்சி முறையில் போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவுகளால் இந்தப் போராட்டம் மேற்கொள் ளப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவிக் கையில்-

குழந்தை பிறந்து 14 நாள்களே ஆன நிலையில் சாப்பாடு வாங்குவதற்காகச் சென்ற காரைத்தே பயிற்றிவிப்பாளரான தனுசன் கடந்த 7 ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளார். மனைவியும் 14 நாள் குழந்தை யும் அவரைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார் கள்.

எல்லா அரசுகளும் மாறி மாறிக் கடத்தலைச் செய் கின்றன. தமிழ் மக்களுக்கு தீர்வைத்தர அவர்கள் தயாராகவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்குப் பதில் இல்லை. இதனால் யாருக்கு வாக்களித்தும் எந்தப் பயனும் இல்லை. அமெரிக் காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தலையிட்டு நீதி யைப் பெற்றுத்தர வேண்டும்-என்றனர்.

கடந்த 7 ஆம் திகதி காணாமற்போன தனுசனின் மனைவி குழந்தை உட்பட காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவினர்கள் கலந்து கொண்டனர். (ஐ-100)

## ஜனாதிபதித் தேர்தல்: 156 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதித் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 7 ஆம் திகதி முதல் இதுவரை 156 தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் 153 தேர்தல் சட்ட மீறல்களும் 3 வன்முறைச் சம்பவங் களும் பதிவாகியுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 92 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (ஐ)

## ஐ.தே.க. எம்பிக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஒக். 11

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மேல் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு அனுமதியின்றி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந் தமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அவரது வீட்டில் இருந்து துப்பாக்கியை மீட்டிருந் தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அவ ருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தபோதிலும் அதில் அவர் பிணை நிபந்தனையை மீறினார் என மேல் நீதிமன்றுக்குப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதித் தேர்தலுக்காக திறைசேரியிலிருந்து மேலதிகமாக பணம் கோருகிறது ஆணைக்குழு!

கொழும்பு, ஒக். 11

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் கள் ஆணைக்குழு திறைசேரியில் இருந்து மேலதி கமாக 120 கோடி ரூபாவைக் கோரியுள்ளது.

தேர்தலில் போட்டியிட 35 வேட்பாளர்கள் தகுதி பெற்றனர் என அறிவிக்கப்பட்டதை அடுத்து, தேர்தலுக்கு 450 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கடந்த வாரம் தெரி வித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது இதற்கு மேலதிக மாக 120 கோடி ரூபாவைச் அத்திணைக்களம் கோருவதாக அரச திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (ஐ)



## வவுனியாவில் 24 பேருக்கு டெங்கு

வவுனியா, ஒக். 11

வவுனியா நகர்ப் பகுதியில் 24 டெங்கு நோயா ளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும், டெங் கைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக வும் சுகாதாரப் பணிமனையின் மேற் பார்வை சுகாதாரப் பரிசோதகர் ரி.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா நகரப்பகுதியில் டெங்கு தொற்று அதி கரித்துள்ளது. இங்கு 24 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 103 இடங்கள் நுளம்பு பெருக்கக் கூடிய இடங்களாக அடையாளம் காணப் பட்டுள்ளன.

வவுனியா நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்த சுகா தார பரிசோதகர்கள் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். மக்களும் டெங்கு நுளம் பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த ஒத்துழைக்க வேண்டும்-என்றார். (ஐ-100)

# மைத்திரி - ரணில் அரசின் காலத்திலேயே முஸ்லிம்கள் மீது அதிக வன்செயல்கள்!

## சாடுகின்றார் மேல் மாகாண ஆளுநர் முஸம்மில்



கொழும்பு, ஒக். 11

தற்போதைய அரசின் ஆட்சிக்காலத் திலேயே முஸ்லிம் மக்களுக்கு எதிராக பெரும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் தெரிவித்துள் ளார்.

மினுவாங்கொடையில் எரிக்கப்பட்ட கடைகளுக்குப் பதிலாக புதிய கடை களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்-

மஹிந்த ஆட்சிக் காலத்தில் அளுத் கம கலவரம் இடம்பெற்றது. சுமார் 24 மணித்தியாலத்தினுள் அந்தக் கலவ ரத்தை மஹிந்த அரசு முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. முழு நாட்டையும் பாதுகாத்தது. அத்து டன் நின்றுவிடாமல் பாதிக்கப்பட்ட மக் களுக்கு இழப்பீடுகளையும் வழங்கத் துரித நடவடிக்கைகள் முன்னெடுத்து. அதில் ஒருவருக்கு நான்கரைக் கோடி ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் திகணவில் ஒரு வாரமாகக் கலவரம் வெடித்தது, மினுவாங்கொடை, சிந்தொடையில் முஸ்லிம்களின் உடை மைகளுக்குச் சேதம் விளைவிக்கப் பட்டது. இந்த அரசு என்ன செய்தது? காரணம் கேட்டால் மொட்டுக் கட்சியின் வேலை எனக் கூறி நழுவி விடுகிறது. பொலிஸ் அவர்களிடம், இராணுவம் அவர்களிடம். இவை அனைத்தையும் வைத்துக்கொண்டு கலவரம் செய் தவர்களைக் கைது செய்தார்களா? ஒரு அரசின் பொறுப்பு அடிக்கும் வரை காத்தி ருப்பதல்ல.

இந்த நாட்டின் பிரஜைகள், மதஸ் தலங்கள், பொதுமக்களின் உடைமை கள் அனைத்திற்கும் பாதுகாப்பு வழங்கு வதே ஒரு அரசின் பொறுப்பு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

யாரோ ஒரு காடையர் கூட்டம் இவ் வாறான வன்செயல்களில் ஈடுபடுவார் களானால், அவர்களைக் கைது செய்து தண்டனை வழங்கவேண்டியது அரசின் பொறுப்பு. அதை விடுத்து அடுத்தவர் கள் மேல் பழிபோடுவதில் பயனில்லை. முஸ்லிம் மக்களுக்கு என்ன நடந்தா லும் இறுதியில் வாக்கு எங்களுக்கு என்ற நிலைப்பாட்டிலேயே தற்போதைய அரசு உள்ளது.

ஆகவே எங்களுக்குச் சக்தி வாய்ந்த, உறுதியான ஓர் ஆட்சி தேவை. அது மட்டுமல்ல நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய ஆற்றல் மிக்க தலைமைத்துவம் தேவை. அதனால் எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் சிந்தித் துச் செயலாற்ற வேண்டும்-என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2019 இல் வெளியிடப்பெற்றது.